1979 பிப்ரவரி 26]

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, ஆய்வுத் தொகையை மதிப்பீட்டுத் தொகையோடு சேர்த்துக் கட்டுவதற்கு அனுமதி வழங்கி அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர அரசு ன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஆய்வுத் தொகையை விரைவில் கட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் முயற்சி எடுக்க வேண்டும் செல்வாக்கை உபயோகிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. துரை கலியமூர்த்தி : கேள்வியாகக் கேட்கிறேன். திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் நகருக்கு ஆவுடையார் குளத்தில் இருந்து குடிநீர் வழக்கும் திட்டம் அரசிடம் உள்ளதாஎன்று கேட்டதற்கு அமைச்சர் இல்லை என்று சொல்லி விட்டார்கள், விளக்கம் சொல்லவில்லை.. (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

சென்னை நகராட்சித் திட்டங்களுக்கு உதவி.

*வினா எண். 188—திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சியின் எந்தெந்த திட்டங்களுக்கு எந்தெந்த ஆண்டுகளில் உலக வங்கியிடமிருந்து எவ்வளவு தொகை கடனாக பெற்றுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சென்னை மாநகராட்சியால் செயல்படுத்தப்படும் சாலை திட்டங்கள் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்துவதற்கென மேற்கொள்ளப்பட்டுள்ள சென்னை நகர்புற வளர்ச்சித் திட்டங்களின் ஒரு பகுதியாகும். இச் சாலைத் திட்டங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.2 கோடி. இம் மூன்றாண்டுத் திட்டம் 1977–78 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மொத்த செலவில் 45 சதவீதம் உலக வங்கியின் கடனுதவியாகும். இதுவரை இத் திட்டத்திற்கு செலவிடப்பட்டது 27.21 இலட்ச ரூபாயாகும். 1978–79-ல் 8.3 இலட்சம் செலவிடப்படும். மீதித் தொகை 1979–80-ல் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 9-40]

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, எந்தெந்த திட்டங்களுக்கு உலக வங்கியிடமிருந்து மாநகராட்சி கடன் பெற்றது என்ற கேள்விக்கு சாலைத் திட்டம் ஒன்றை மட்டும் அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். குடிநீர்—வடிகால் வாரியம் தனியாகப் பிரிக்கப்பட்டபோது எவ்வளவு தொகை அதற்கு கடன் பெறப்பட்டது. அந்தத் தொகை முழுவதும் செலவிடப்பட்டுவிட்டதா ? அப்படி இல்லை என்றால் மாநகராட்சி நிதியிலிருந்து அந்த நிர்வாகம் நடைப் பெறுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, உலக வங்கி உதவியிலிருந்து மாநகராட்சி செய்யக்கூடியதை பதிலிலே சொல்லி விட்டேன். மற்றவைகளுக்கு தனிக் கேள்வி போடவும்.

திரு. சோ அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த மாநகராட்சித் திட்டங்களுக்கு உலக வங்கிக் கடனுக்கு நிபந்தனை ஏதாவது உண்டா ? வரி விதிக்கக்கூடிய அந்த யோசனை கூட அவர்களுடைய நிபந்தனையினால் தான் என்று நான் கேள்விப் படுகிறேன். ஏனென்றால் முன்னால் எல். டி. பாங்க் நிபந்தனை அப்படி இருந்தது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே தகவல் இல்லை. வாங்கியத் தொகையை 25 ஆண்டுகளில் திருப்பிக் கட்ட வேண்டும். முதல் 5 ஆண்டுகளுக்கு மாரட்டோரியம்—அதாவது தொகை செலுத்த வேண்டியதில்லை. அதற்குப் பின்னால் 25 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும் அதற்கு வட்டி 9 சதவீதம்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அளித்த பதிலில் சாலை அபிவிருத்திக்கு அளிக்கப்பட்ட நிதியைப் பற்றிச் சொன்னார்கள். உலக வங்கியிலிருந்து பெறப்பட்ட தொகையினால் எந்தெந்தச்

1979 பிப்ரவரி 26]

சாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறன்றன ? நெடுஞ் சாலைகள் மட்டும் அபிவிருத்திக்கு எடுததுக் கொள்ளப்பட்டுள் ளனவா அல்லது நகரத்தின் உள்பகுதியிலுள்ள சாலைகளும் அந்த நிதியிலிருந்து பராமரிக்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர் களே, தனிக் கேள்வி போடவும்.

அரிசனங்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளைப் பழுது பார்த்தல்

வினா எண். 189.—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசனநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

அரிசனங்களுக்கு 1967—ம் ஆண்டுக்கு முன் பங்குத் தொகை பெற்று அளிக்கப்பட்ட ஓட்டு வீடுகளுள் தற்போது மோசமான நிலையில் உள்ளவற்றை அரசே பழுது பார்த்துக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:—
அரிசனங்களுக்கு 1967— ஆண்டுக்கு முன் பங்குத் தொகை பெற்று அளிக்கப்பட்ட ஓட்டு வீடுகளுள் தற்போது மோசமான நிலையில் உள்ளவற்றை அரசே பழுது பார்த்துக் கொடுக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. மா. மணிமாறன். தலைவரவர்களே, 1967-ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்ட ஓட்டு வீடுகள் குறைந்த தொகையில், 600 ரூபாய்க்குள் கட்டப்பட்டதால் அவை சரியாக இல்லை. அங்கு வாழ்கின்ற மக்கள் என்றைக்கு இடிந்து விழுமோ என்று அச்சத்தில் இருந்துக் கொண்டிருக் கிறார்கள். எனவே, அப்படி 1967-ஆம் ஆண்டுக்கு முன்னால் கட்டப்பட்ட ஓட்டு வீடுகளை இப்போது கட்டுகின்ற காங்கிரிட் வீடுகளாக கட்டிக் கொடுக்க முன்னுரிமை கொடுத்து, அவர்கள் அச்சமின்றி வாழ வழிவைகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர வர்களே, அரசாங்கம் ஒரு வீட்டைக் கட்டிக் கொடுத்துவிட் டால, அது அவர்களுடைய உரிமை, உடமையாகிறது, ஆகவே, மீண்டும் அந்த வீடுகளை பழுது பார்ப்பது என்பது அரசாங்கம்